RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s1351

OPEN ACCESS

# முத்தொள்ளாயிரத்தில் தொல்காப்பியரின் எண்வகை மெய்ப்பாடுகள்

**மு. தேன்மொழி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம்-637404, தமிழ்நாடு, இந்தியா.

# The Numerical Realities of Tolkappiyar in Muthollaayiram

**M. Thenmozhi** [a, *]

[a] Department of Tamil, Government Arts and Science Collage, Vettukkadu, Senthamangalam–637404, Tamil Nadu, India

* Corresponding Author: vinayagasakthi@gmail.com

Received: 21-06-2022
Revised: 14-08-2022
Accepted: 27-08-2022
Published: 28-11-2022

Check for updates

**ABSTRACT**

It is no exaggeration to say that literature helps to understand the richness of a language. Though there are many kinds of literature in Tamil that trace the history of thousands of years, it is classical literature that is noteworthy. One of the classical texts, Muthollaayiram, carries the history of the Chera, Chola, and Pandya kings their valour, gifts, the country's greatness, prosperity, etc. It is composed in muthollaayiyiram venba verse and has all the grammatical elements together with woven syllables such as alliteration, rhyme, and harmony. Among them is the reality of words, in the substance of difference in the object of weeping, loss, and movement as states on the basis of delusion, novelty, and fear in the substance of God (leadership) The subject matter of pride and charity has also been explored. Moreover, the innocence and the happiness of reality have also been examined in detail in this article.

**Keywords:** Classic literature, Muthollaairam, Realisation, Leadership

## முன்னுரை

செவ்வியல் இலக்கியங்களில் முத்தொள்ளாயிரமும் ஒன்றாக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்நூல் சேர, சோழ, பாண்டிய அரசர்களைப் பற்றி பாடப்பட்ட அகப்பாடல்களையும், புறப் பாடல்களையும் கொண்டுள்ளது. நாயகி, நற்றாய், செவிலித்தாய், தோழிகள் ஆகிய நான்கு பாத்திரங்கள் பேசுவதாகப் படைக்கப்பட்ட இந்நூல் வெண்பா யாப்பில் அமைந்துள்ளது. மேலும் தொல்காப்பியர் கூறும் எண்வகை மெய்ப்பாடுகளும் அமையப்பெற்றுள்ளன. அம்மெய்ப்பாடுகளை விளக்கமாக ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## மெய்ப்பாடு

உள்ளத்து உணர்வுகளை உடல்மொழியில் காட்டுவதே மெய்ப்பாடு எனலாம். மேலும்,

"உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையில்
மெய்ப்பட முடிவது மெய்ப்பாடாகும்" (Ilampooranar, 2005)

என்று தொல்காப்பியரும்,

"உண்ணிகழ் தனிமை புறத்துத் தோன்ற
எண்வகை மெய்ப்பாட்டின் இயப்வது சுவையே"

என்று தண்டி ஆசிரியரும் மெய்ப்பாட்டிற்கு இலக்கணம் கூறுகின்றனர். இனி தொல்காப்பியர் குறிப்பிடும் எட்டுவகை மெய்ப்பாடுகளை முத்தொள்ளாயிர பாடல் வழி காணலாம் (Sundaramoorthi, 2013).

## நகை

வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டு போகும் என்பது பழமொழி. மனிதர்களைப் பொன்னகையால் அலங்கரிப்பதைக் காட்டிலும் புன்னகையால் அலங்கரிப்பது சிறந்தது எனலாம். இதனைத்தான் வள்ளுவர் "இடுக்கண் வருங்கால் நகுக என்கிறார். ஒரு செயல்களை மேற்கொள்ளும்போது இடையூறு வரின் அதற்காக மனம் தளருதல் கூடாது. மேலும் நிறைவேற்றியே தீருவோம் என்று உள்ளுற மகிழ்க" என்கிறார்.

'எள்ளல் இளமை பேதமை மடனென்று

உள்ளப் பட்ட நகைநான் கென்ப'

என்ற நான்கின் அடிப்படையில் நகை தோன்றும் என்பதை மேற்கண்ட நூற்பா உணர்த்துகிறது (Ilampooranar, 2005).

## பேதமையால் வரும் நகை

"பேதமை என்பதற்கு அறிவின்மை" என்று பேராசிரியரும் "கேட்டதை உணராது மெய்யாகக் கோடல்" என்று இளம்பூரணரும் "பேதமை என்பது அறியாமை" என்று விளக்கம் தருகின்றார் (Subramaniyan, 2009).

சிவந்த கண்களை உடையவனும் கோதை என்று அழைக்கப்படுபவனுமாகிய சேரனின் கடுமையான கோபம் கொண்ட யானை, வானில் விளங்கும் முழு நிலவினை வெண்குற்றக் குடையென நினைத்து தன்னுடைய துதிக்கையை நீட்டியதால் நகை என்னும் மெய்ப்பாடு பேதமை என்னும் பொருளில் அமைவதை,

'செங்கண்மாக் கோதை சினவெங் களியானை

திங்கள்மேல் நீட்டும் தன்கை'

இப்பாடலடி நமக்கு உணர்த்துகிறது (Kathirmurugu Munaivar, 2005).

## அழுகை என்னும் மெய்ப்பாடு

'இழிவே இழவே அசைவே வறுமையென

விளிவில் கொள்கை அழுகை நான்கே'

என்ற நான்கு காரணங்களால் அழுகை என்ற மெய்ப்பாடு தோன்றும் என்று தொல்காப்பியர் கருத்து தெரிவிக்கிறார் (Ilampooranar, 2005).

## இழவின் காரணமாக வரும் அழுகை

இழவு என்பதற்கு "இழக்கை, கேடு, சாவு" (Kalagapulavar kulu, 2010) என்று கழக அகராதியும், உயிரானும் பொருளானும் இழத்தல் என்று இளம்பூரணாரும் "தந்தையுற் தாயும் முதலாகிய சுற்றத்தாரையும் இன்பம் பயக்கும் நுகர்ச்சி முதலியவற்றை இழத்தல்" என்று பேராசிரியரும் விளக்கம் தருகின்றனர் (Perasiriyar, 2017).

கிள்ளிவளவனின் துளையுடைய துதிக்கையினையும் தொங்குகின்ற வாயினையும் உடைய யானையானது காலை எடுத்து வைத்தால் காலில் பிணிக்கப்பட்டிருக்கும் சங்கிலியின் பிணைப்பு

மட்டும் விடாது, பகை மன்னர்களின் மனைவிமார்களின் மங்கல நாணும் அறுந்து தன் கணவரை இழப்பர் என்று குறிப்பிடும்.

'கானிமிர்த்தால் கண்பரிப வல்லியோ புல்லாதார்

மானனையார் மங்கலநாண் அல்லவோ'

இப்பாடல் அடிகளில் மனைவிமார்கள் தன் கணவனை இழப்பதால் 'இழவு' என்ற பொருண்மையில் அழுகை என்னும் மெய்பாடு அமைவதைக் காணமுடிகிறது (Kathirmurugu Munaivar, 2005).

## அசையினால் வரும் அழுகை

அசை என்ற நிலைக்களனாலும் அழுகை என்ற மெய்ப்பாடு தோன்றும் என்பதை தொல்காப்பிய மெய்பாட்டியல் நூற்பா உறுதி செய்கிறது. அசை என்பதற்கு தளர்ச்சி அதாவது தன்னிலையில் இருந்து தாழ்தல் என்று இளம்பூரணாரும் "பண்டைய நிலையை கெட்டு வேறொருவறாகி வருந்துதல்" என்று விளக்கம் தருகின்றார் (Perasiriyar, 2017).

செம்மை நிறமான கால்களை உடைய இளமையான நாரையே! உன்னுடைய கால்களில் என்னுடைய கைகள் இரண்டையும் வைத்து வேண்டிக் கொள்கிறேன். நீ தென் திசையில் உள்ள சோழ மன்னனின் உறையூர் நகருக்குச் சென்று சோழ மன்னனிடம் என்னுடைய காதலை தெரிவிப்பாயாக என்று தலைவி கூறுவதாக அமைந்த,

'செங்கான் பிடநாராய்! தென்னுறந்தை சேறியேல்

நின் கான்மேல் வைப்பனென் கையிரண்டும் - நன்பாற்

கரையுரிஞ்சி மீன்பிறழுங் காவிரிநீர் நாடற்

குரையாயோ யானுற்ற நோய்'

இப்பாடலடிகளில் தலைவி காதலுக்காக ஐந்தறிவு உயிரிடம் தன்னிலையில் இருந்து தாழ்ந்து கேட்பதாக அமைந்ததால் அசைவு என்னும் பொருண்மையில் அழுகை என்னும் மெய்ப்பாடு அமையப்பெற்றுள்ளதை அறிய முடிகிறது (Kathirmurugu Munaivar, 2005).

## இளிவரல் என்னும் மெய்ப்பாடு

'மூப்பே பிணியே வருத்த மென்மையொடு

யாப்புற வந்த இளிவரல் நான்கே'

என்ற நான்கையும் நிலைகளனாகக் கொண்டு இளிவரல் என்னும் மெய்ப்பாடு பிறக்கும் என்பதை தொல்காப்பியரின் நூற்பா மூலம் அறியமுடிகிறது (Ilampooranar, 2005).

## வருத்தத்தால் வரும் இளிவரல்

சேரமன்னன் மீது காதல் கொண்ட தலைவி ஒருத்தி அவனைப் பார்க்க முடியாமல் வருந்தும் வருத்ததை ஊராரிடம் தெரிவிப்பதாக அமைந்த,

'நீரும் நிழலும்போல் நீண்ட அருளுடைய

ஊரிரே யென்னை யங்கொடமின் - போரிற்

புகலுங் களியானைப் பூழியர்கேக் கோதைக்

கழலுமென் னெஞசங் கிடந்து.'

இப்பாடல் வருத்தத்தை நிலைக்களனாகக் கொண்டு இளிவரல் மெய்ப்பாடு அமைய படைக்கப்பட்டுள்ளது (Kathirmurugu Munaivar, 2005).

## மருட்கை என்னும் மெய்ப்பாடு

மருட்கை வியப்பால் தோன்றுவது. புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்ற நால்வகை பொருண்மையில் பிறக்கும் என்பதை,

'புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு

மதிமை சாலா மருட்கை நான்கே'

என்ற தொல்காப்பிய நூற்பா உறுதி செய்கிறது (Ilampooranar, 2005).

## புதுமையால் வரும் மருட்கை

புதுமை என்பதற்கு "யாதொன்றானும் எவ்விடத்தினும் எக்காலத்தினும் தோன்றாததொரு பொருள், தோன்றிய வழி வியத்தல், அது கந்தருவர் அந்தரம் போவது கண்டு வியத்தல் போல்வன" என்று உரை கூறுகிறார் (Ilampooranar, 2005).

பகைவர்களை வெற்றிக் கொள்ளும் வளவனின் அழகு நிறைந்து விளங்குகின்ற உறையூர் நகரில் மாலைப் பொழுதில் பூக்களை விலைக் கூறி விற்பவர்கள் கிள்ளிப்போட்ட பூவின் புற இதழ்கள் பல நிறத்தில் வீதிகளில் படர்ந்து கிடக்கின்ற காட்சி வானவில் தோன்றியது போல இருக்கின்றது என்பதை உரைக்கும்,

'மாலை விலைபெகர்வார் கிள்ளி களைந்தபூச்

சால மருவியதோர் தன்மைத்தால் - காலையே

விற்பயில் வானகம் போலும் வெல்வளவன்

பொற்பார் உறைந்தை யகம்'

இப்பாடலடிகளில் வானில் தோன்றும் வானவில் பூமியில் தோன்றியதாக அமைந்ததால் அது புதுமை என்னும் பொருண்மையில் அமைந்த மருட்கை என்னும் மெய்ப்பாடாயிற்று (Kathirmurugu Munaivar, 2005).

## அச்சம் என்னும் மெய்ப்பாடு

'அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்

பிணங்கால் சாலா அச்சம் நான்கே'

என்ற நான்கு வகையில் அச்சம் என்னும் மெய்ப்பாடு தோன்றும் என்பதை உணரமுடிகிறது (Ilampooranar, 2005).

## இறையால் வரும் அச்சம்

தம் இறை என்பதற்கு "தமக்கு மேலே உள்ள அதிகாரிகளுக்கு அஞ்சுதல்" என்று (Tamilannal, 2010), "இறையென்ப்படுவோர் தந்தையரும் ஆசிரியரும் மன்னராலும் வரும் அச்சம்" என்று பேராசிரியர் இறை என்ற பொருண்மைக்கு விளக்கம் தருகின்றனர் (Perasiriyar, 2017).

போர்க்களத்தில் விருப்பமுடையதும் ஒளிவீசுவதுமான வேலினைக் கையில் தாங்கியவனும், கோபத்துடன் கொடுமையான போரைச் செய்கின்றவனுமான பாண்டியன் மாறனின் போர் முரசு

இடியோசைபோல் ஒலி எழுப்ப அவ்யோசைக்கு பாம்புகளும் பகைநாட்டு மன்னர்களும் பயந்து நடுங்குவதைக் குறிப்பிடும்,

'செருவெங் கதிர்வெற் சினவெம்போர் மாறன்

உருமி னிடிமுர சார்ப்ப - அரவுறழ்ந்

தாமா வுகளு மணிவரையி னப்புறம்போய்

வேமால் வயிறெரிய வேந்து'

என்ற இப்பாடலில், அரசரால் உண்டான பயம் குறிப்பிடப்பட்டுள்ளது (Kathirmurugu Munaivar, 2005). எனவே இங்கு இறை என்னும் பொருண்மையில் அச்சம் என்னும் மெய்ப்பாடு வெளிப்படுகிறது. முத்தொள்ளாயிரத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் பல பாடல்களில் அச்சம் என்னும் மெய்ப்பாடு அமையப்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பெருமிதம் என்னும் மெய்ப்பாடு

'கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்

சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே'

என்ற நான்கு பொருள்களில் மெய்ப்பாடு வரும் என்பதை தொல்காப்பிய நூற்பா மூலம் அறியமுடிகிறது (Ilampooranar, 2005).

## கொடையால் வரும் பெருமிதம்

கொடையென்பதற்கு பேராசியரியர் உயிரும் உடம்பும், உறுப்பும் முதலாகிய எல்லாப் பொருளும் கொடுத்தல் என்று விளக்கம் தருகிறார். மேலும் க. வெள்ளையவாரணர் தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் என்னும் நூலில் "தன்கண் உள்ள, உயிர், உடம்பு, உறுப்பு முதலிய எல்லாப் பொருள்களையும் பிறர்க்கு வரையாது வழங்குதலாகிய கொடைத்திறம்" என்று உரைத்துள்ளார் (Vellaivaranan, 1986).

ஒளி பொருந்தியதுமான வேலினைக் கொண்ட கிள்ளிவளவன் இரேவதி நட்சத்திரமான தான் பிறந்த நாளில் அறவோர்கான அந்தணர்களுக்குப் பசுக்களோடு பொன்னைக் கொடுத்தான். கல்வியில் நிறைவுடைய புலவர்களுக்கு மந்தார மலையினைப் போன்ற யானைகளைப் பரிசாகக் கொடுத்தான் என்று கிள்ளிவளவனின் கொடைத்தன்மையைப் பறைசாற்றும்,

'அந்தணர் ஆபொடு பொன்பெற்றார் நாவலர்

மந்தரம்போல் மாண்ட களிறூந்தார் - எந்தை

இலங்கிலைவேந் கிள்ளி ரேவதிநாள் என்னோ

சிலம்பிதன் கூடிழந்த வாறு'

இவ்வடிகள் கொடை என்னும் பொருண்மையில் பெருமிதம் என்னும் மெய்ப்படு அமையப் பெற்றுள்ளதை அறிய முடிகிறது (Kathirmurugu Munaivar, 2005). இதே போன்று முத்தொள்ளாயிரத்தில் பல பாடல்கள் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் கொடைத் தன்மையைப் பறைசாற்றி பெருமிதம் மெய்ப்பாட்டோடு படைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வெகுளி என்னும் மெய்ப்பாடு

'உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற

வெறுப்ப வந்த வெகுளி நான்கே'

என்ற நான்கையும் நிலைக்களனாகக் கொண்டு வெகுளி என்னும் மெய்ப்பாடு தோன்றும் என்பதை தொல்காப்பிய நூற்பாவழி அறிய முடிகிறது (Ilampooranar, 2005).

## அலையால் வெளிப்படும் வெகுளி

அலை என்பதற்கு "வைதலும் புடைத்தலும்" என்று (Ilampooranar, 2005), 'கோல்கொண்டடித்தல்' என்று பேராசிரியரும், வெள்ளைவாரணர் "அரசியல் நெறிமுறைகளுக்கு மாறாக கோல்கொண்டு அலைத்தல் முதலிய தீத்தொழில்கள்" என்றும் விளக்கம் தருகிறார் (Vellaivaranan, 1986).

வலிமையான தேர்ப்படையைக் கொண்ட சோழமன்னனின் பொருட்டாக ஊரார்கள் எல்லாம் என்னை அலர் தூற்றுகின்றனர். என்னுடைய அன்னை சிறிய கோலை எடுத்துக் கொண்டு என்னை அடித்துத் துன்புறுத்துகிறாள் என்று தலைவி கூற்றாக அமைந்த,

'அன்னையுங் கோல்கொண் மலைக்கும் அயலாரும்

என்னை யழியுஞ்சொற் சொல்லுவர்'

இப்பாடலடிகளில் தலைவியைச் செவிலித்தாய் கோல் கொண்டு அடித்ததால், அலை என்னும் பொருண்மையில் வெகுளி என்னும் மெய்ப்பாடு அமையப்பெற்றுள்ளது. இந்நூலில் வெகுளி என்னும் மெய்ப்பாடு பல இடங்களில் காணப்படுகின்றன (Kathirmurugu Munaivar, 2005).

## உவகை என்னும் மெய்ப்பாடு

'செல்வம் புலனே புணர்வு விளையாட்டென

அல்லல் நீத்த உவகை நான்கே'

என்ற நான்கின் அடிப்படையில் உவகை என்னும் மெய்ப்பாடு தோன்றும் என்பதை மேற்கண்ட தொல்காப்பிய நூற்பா உணர்த்துகிறது (Ilampooranar, 2005).

## புணர்வால் வரும் உவகை

புணர்வு என்றபதற்கு அன்போடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற் காமப் புணர்ச்சி என்று வெள்ளை வாரணரும், காமப்புணர்ச்சியால் வரும் உவகை என்று பேராசியரியரும் விளக்கம் தருகின்றனர்.

சுரபுன்னை மரங்கள் இதழ்விரித்து மலர்ந்து மணம் வீசுகின்ற சேரநாட்டை உடையவனுமாகிய சேர மன்னன் இரவுப் பொழுதில் ஒருநாள் கனவில் வந்து உடலை தடவினான் என்று தலைவிக் கூற்றாக அமைந்த

'கங்கு லொருநாட் கனவினுட் டைவந்தான்

என்கொல் இவரறிந்த வாறு'

இப்பாடலடிகளிலும், மதுரை நகரில் வாழ்கின்றவர்க்கு மன்னனாக விளங்கும் பாண்டிய மன்னனைக் கூடி இன்புறுவேன் என்று தலைவி குறிப்பிடும் (Kathirmurugu Munaivar, 2005),

'கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக்

கூடப் பெறுவேனேல் கூடடென்று'

இப்பாடலடிகளிலும் புணர்வு என்ற பொருண்மையில் உவகை என்னும் மெய்ப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது (Kathirmurugu Munaivar, 2005).

## முடிவுரை

பிரபந்தம் என்று அழைக்கப்படும் 96 வகை சிற்றிலக்கியங்களுள் செவ்வியல் தகுதி பெற்றது முத்தொள்ளாயிரம் மட்டுமே. மூவேந்தர்களையும் இந்நூல் செம்மாந்து சுமந்து நிற்கிறது என்றால் மிகையாகாது. இந்நூலில் பயணிக்கும் மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளை தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எட்டுவகை மெய்ப்பாடுகளும் சரியாக பொருந்தியுள்ளன. இதன்வழி கவிஞரின் அறிவு துட்டமும் சிந்தனைத்திறனும் வெளிப்படுகிறது. மேலும் இலக்கியங்கள் உணர்ச்சிக்கு ஆட்பட்டவை என்பது புலனாகிறது.

## References


Ilampooranar, (2005) Tholkappiyam Porulathikaram, Saratha Pathipagam, Chennai, India.

Kalagapulavar Kulu, (2010) Kalaka Tamilagarathi, Thirunalveli Theninthiya Siva Sithantha Nurpathipu kalagam Ltd, Chennai, India.

Kathirmurugu Munaivar, (2005) Muthollaairam, Saratha Pathipagam, Chennai, India.

Perasiriyar, (2017) Tholkapiyam Porulathigaram, Perasiriyar Urai, Amaravathi Pathipagam, Chennai, India.

Subramaniyan, S.V. (2009) Tholkapiyam Meipatiyal, Uraivalam, Maiyappan Pathipagam, Chidambaram, India.

Sundaramoorthi, (2013) Thandiyalangaram, Uma Pathipagam, Chennai, India.

Tamilannal, (2010) Tholkapiyam Porulathigaram, Volume -3 (Maipattiyal, Uvamaiyal) Meenathci Puthaga Nilaiyam, Madurai, India.

Vellaivaranan, Ka. (1986) Tholkapiyam Meipatiyal, uraivalam, Madurai Kamarajar University, Madurai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License